இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNPA903– விசேட தேவைகள் சார் கல்வியில் கலைத்திட்டம், போதனை மற்றும் கணிப்பீடு**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.02.2024 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. (அ) கற்றலுக்கான உலகலாவிய வடிவமைப்பு (Universal Design for Learning) மற்றும் வேறுபடுத்தப்பட்ட போதனை (Differentiated Instruction) ஆகிய எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்தி அவற்றை வேறுபடுத்துக.

(20 புள்ளிகள்)

(ஆ) பல்வகைத் தேவைகளையுடைய மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பறையில் கற்றலுக்கான உலகலாவிய வடிவமைப்பு மற்றும் வேறுபடுத்தப்பட்ட போதனை (DI) ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களின் பயன்பாடு பற்றி கலந்துரையாடுக.

(40 புள்ளிகள்)

(இ) கற்றலுக்கான உலகலாவிய வடிவமைப்பின் அடிப்படைத் தத்துவங்களை விளக்குவதுடன், இலங்கையில் விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு, கற்றலுக்கான உலகலாவிய வடிவமைப்பு பிரதான கலைத்திட்டத்திற்கான அணுகலை உறுதி செய்வதற்கான அதன் செயற்றிறனையும் விளக்குக. இலங்கை வகுப்பறைகளில் கற்றலுக்கான உலகலாவிய வடிவமைப்பினது ஒருங்கிணைப்பை எடுத்துக்காட்டும் வகையில் பொருத்தமான உதாரணங்களை முன்வைக்குக.

(40 புள்ளிகள்)

2. (அ) விசேட தேவைகள் சார் போதனைகளில் சான்றுகள் அடிப்படையிலான நடைமுறைகள் (Evidence – Based practice) எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

(20 புள்ளிகள்)

(ஆ) விசேட தேவை சார் கல்விக்குள் நீங்கள் தேர்ந்தெடுத்த நிபுணத்துவம் வாய்ந்த இரண்டு (02) குறிப்பிட்ட சான்றுகள் அடிப்படையிலான நடைமுறைகளைச் சுருக்கமாக விளக்கி, அவை நடைமுறைப்படுத்துவதற்கான யதார்த்த உலக உதாரணங்களை தருக.

(40 புள்ளிகள்)

(இ) இலங்கையில் விசேட தேவைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு ஏற்ற வெவ்வேறு கற்பித்தல் மற்றும் கண்டுபிடிப்புக்களைப் பற்றிக் கலந்துரையாடி, இக் கண்டுபிடிப்புக்களால் எவ்வாறு தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்து கற்றற் பேறுகளை மேம்படுத்த முடியும் என்பதை விளக்குக.

(40 புள்ளிகள்)

3. (அ) தனியாள் மையக் கல்வித் திட்டம் (IEP) என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

(20 புள்ளிகள்)

(ஆ) இலங்கைச் சூழலில் விசேட தேவைகளையுடைய மாணவர்களுக்கான தனியாள் மையக் கல்வித் திட்டத்தின் கூறுகள் மற்றும் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.

(40 புள்ளிகள்)

(இ) இலங்கையில் இயலாமைகளுடைய மாணவர்களை மதிப்பிடுவதற்கான பல்வேறு நுட்பங்கள் மற்றும் முறைகளை பகுப்பாய்வு செய்க. முறைசார் மற்றும் முறையில் மற்றும் வெவ்வேறுபட்ட கற்றல் சுயவிவரங்களுக்கேற்ப அவற்றின் பொருத்தப்பாட்டினையும் பகுப்பாய்வு செய்க.

(40 புள்ளிகள்)

4. (அ) கலைத்திட்ட அணுகுமுறைகளின் முக்கிய மாறுபட்ட வகைகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

(ஆ) விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு உதவியளிப்பதற்கான இரண்டு (02) வெவ்வேறு கலைத்திட்ட அணுகுமுறைகளை ஒப்பிட்டாராய்க.

(40 புள்ளிகள்)

(இ) மாணவர்களின் பல்வகைமை, ஆசிரியர் வளங்கள் மற்றும் இலங்கையில் உள்ள சமூக அணுகுமுறைகள் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு, நீங்கள் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு அணுகுமுறைகள் தொடர்பான நன்மைகள் மற்றும் சவால்களை பகுப்பாய்வு செய்க.

(40 புள்ளிகள்)

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*